# தூய லூர்து அன்னை ஆலயம்


50 ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம்
frmichaelsitaram@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பால் இயோ
fryeopaul@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ்
nithiya@catholic.org.sg

பங்கு அலுவலகம் : ololpastoral@gmail.com
ololsec@gmail.com


21~01~2018 பொது காலம் 3ஆம் ஞாயிறு (இரண்டாம் ஆண்டு)



## நன்றியின் விழா - பொங்கல் விழா கொண்டாட வாரீர்!



**இன்று மாலை 4.30 மணிக்கு** நமது ஆலயத்தில் பொங்கல் கொண்டாட்டம் நடைபெறும். தொடர்ந்து **மாலை 6.30 மணிக்கு திருப்பலி** நடைபெறும்.

## ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணி



தேதி : ஞாயிறு, 28-01-2018

நேரம் : மதியம் 2.30மணி



**ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் பிற்பகல் 2.30 மணி முதல் 4.00 மணி வரை மூடப்பட்டிருக்கும்.**

நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்போடு அழைக்கின்றோம்.

## முழு இரவு ஜெப வழிபாடு

மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது சனிக்கிழமையும் இரவு 9.30 மணி முதல் மறுநாள் காலை 5.30 மணி வரை முழு இரவு ஜெப வழிபாடு நடைபெறும். கலந்து கொண்டு தூய ஆவியின் கனிகளை, கொடைகளை பெற்றுக் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## இடைவிடா சகாய மாதா நவநாள் மற்றும் நற்கருணை ஆராதனை

ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8.30 மணிக்கு நம் தூய லூர்து அன்னை ஆலயத்தில் நடைபெறும். நம்முடைய பங்கு மக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு இறையாசீர் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

# சிந்தனை

பொதுக்காலம் மூன்றாம் ஞாயிறுத் திருப்பலிக்கு வந்துள்ள இறை மக்களே, உங்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

இன்றைய ஞாயிறு நற்செய்தி, நாம் கடவுளிடம் முழுமையாகச் சரணடையவேண்டும் என நம்மை அழைக்கிறது. “காலம் நிறைவேறிவிட்டது” - 2000 வருடங்களுக்கு முன்பு அல்ல. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது அல்ல, இப்பொழுதே உங்கள் வாழ்வில் இயேசு தேவையாக இருக்கிறார்.

“இறையாட்சி நம் கைகளில்” - கடவுளிடமிருந்து நமக்கு என்ன தேவையோ, அது இங்கே நம் கைகளில் தயாராக இருக்கிறது. “மனம் மாறி , கடவுளின் நற்செய்தியை நம்புங்கள்” என்பது அர்த்தம், “என் பின்னால் வாருங்கள், என்னிடமிருந்து கற்றுக் கொண்டு, என்னைப் போல் மாறுங்கள்” என்பதாகும். முதல் சீடர்களுக்கு , உங்களிடம் உள்ளது அனைத்தையும் துறந்து விட்டு, எல்லா நேரத்திலும், இயேசுவோடு, முழு வாழ்வும் அவரோடு இணைந்து செயல்படவேண்டும்” என்று சொல்லப்பட்டது.

அதையே தான் நமக்கும் இன்றைய நற்செய்திக் கூறுகிறது: இயேசுவின் பின் நாமும் செல்ல வேண்டும். இன்றைய நாகரீக உலகில், இயேசுவை விட , நவீன எலக்ட்ரானிக் கருவிகளோடு தான் நாம் அதிக நேரம் செலவிடுகிறோம். மேலும் அதையே நம்பியிருக்கிறோம். நம்மில் பலர், திருப்பலியில் கூட ஒன்றிணையாமல் தங்கள் செல்போனிலேயே கவனமாக இருக்கின்றார்கள். இன்று போல் நாளை இராது. எனவே இன்று நாம் ஞாயிறன்று, இயேசுவோடு நேரம் செலவழித்து, நம்மையே நாம் புதுப்பித்துக் கொள்ளவோம். இவ்வுலகிலேயே இறையரசின் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள, நாம் மனமாற்றம் அடைந்து இயேசுவைப் பின் செல்ல இத்திருப்பலியில் இறைவனிடம் ஒன்றிணைந்து மன்றாடுவோம்.

அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

## இரண்டாவது காணிக்கை

கத்தோலிக்க அடித்தள அமைப்பின் GIFT (விசுவாசத்துடனும் நன்றியறிதலுடம் கொடுத்தல்) திட்டத்திற்கான உங்களது மாதாந்திரப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள இரண்டாம் காணிக்கை வசூலிக்கப்படும்.

## தூய லூர்து அன்னை ஆலயம் திருவிழா 2018

நம்முடைய பங்கின் பாதுகாவலியாம் தூய லூர்து அன்னையின் ஆண்டுப் பெருவிழா 01-02-18,(வியாழன்) முதல் 09-02-18, (வெள்ளி) வரை நவநாட்களும், பிப்ரவரி மாதம் 10ஆம் தேதி சனிக்கிழமை மாலை 6.00மணிக்கு திருவிழா திருப்பலியும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னையின் திருவுருவம் தாங்கிய தேர்ப்பவனியும் நடைபெறும்.

**பிப்ரவரி 07, 08** மற்றும் **09** (புதன், வியாழன் மற்றும் வெள்ளி) ஆகிய 3 நாட்களில் இரவு 8.00 மணிக்கு தமிழில் நவநாள் திருப்பலி நடைபெறும் கலந்துக் கொண்டு சிறப்பிக்கவும்.

**குறிப்பு : நம் பங்கின் ஆண்டுத் திருவிழாவை சிறப்பாகக் கொண்டாட நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. நன்கொடை தரவிரும்புவோர் பங்கு அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுகொள்ளும்படியாக அன்போடுகேட்டுக்கொள்கின்றோம்.**

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு தடவை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சி | கை | க் | டி | ப | நி | னி | வே | க் | கு |
| ட் | க் | ஆ | லை | வி | றி | அ | ங் | லி | க் |
| யா | பி | யை | னை | ட | ண் | த | வ | ட் | ளு |
| றை | ம் | ம் | ம் | ம | டா | ளா | று | ண் | க |
| இ | ந | செ | ந | னே | க | ஞா | பே | வி | வி |
| தீ | தை | இ | ன் | ர் | தி | ன | ப் | ழி | பா |
| ன் | டு | பி | தீ | பா | ப் | ள் | லை | கு | லை |
| யா | ட | த் | க | தை | ந் | தா | நா | ய | வ |
| மீ | ன | வ | ர் | க | ளா | ன | ர் | டு | மு |
| அ | ரு | ள் | பொ | ளை | வு | ற | இ | டு | நெ |

1. யோனா புறப்பட்டு ஆண்டவரது கட்டளைப்படி _________ச் சென்றார்.
2. அவர்கள் மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்த _________ அனுப்பவில்லை.
3. _________ நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்.
4. ஆண்டவரே, உம் _________ நான் அறியச் செய்தருளும்.
5. அவர் _________ நல்வழியைக் கற்பிக்கின்றார்.
6. இவ்வுலகு இப்போது இருப்பதுபோல் _________ இராது.
7. _________ அவர்கள் கடலில் வலை வீசிக்கொண்டிருந்தார்கள்.
8. என் _________ வாருங்கள். நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்.

## ஞாயிறு வாசகங்கள்



முதல் வாசகம்: யோனா 3:1-5,10

பதிலுரைப்பாடல்: 25:4-5.6-7bc.8-9

பதிலுரை: ஆண்டவரே, உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும்.

இரண்டாம் வாசகம்: 1 கொரி 7:29-31

வாழ்த்தொலி: அல்லேலூயா, அல்லேலூயா! இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள். அல்லேலூயா!

நற்செய்தி வாசகம்: மாற் 1:14-20

## ஆலயத் திருப்பலி நேரங்கள்

| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) | : மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) | : மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) | : மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) | : காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) | : காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை(ஆங்கிலம்) | : காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) | : காலை 10:00 மணி |



## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை | : மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை | : மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : வெள்ளி மாலை 6:30 மணி தொடர்ந்து திருப்பலி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை | : வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் | : ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை | : ஞாயிறு மாலை 6:00 மணி |
| | இறைவாழ்வு செபக்குழு வழிபாடு | : ஞாயிறு இரவு 9:00 மணி |
| | லூர்து அன்னை நவநாள் | : முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் | : முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் | : வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் மற்றும் நற்கருணை ஆராதனை | : சனி மாலை 8:30 மணி |
| | முழு இரவு ஜெப வழிபாடு | : மாதத்தின் இரண்டாவது சனி இரவு 9.30மணி |
| | புனித பியோ செப வழிபாடு | : மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**